# ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය
## இலங்கையின் பிரதம அமைச்சர்
## *Prime Minister of Sri Lanka*

மூன்று தசாப்தங்களாக நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற பயங்கரவாதத்தை இல்லாதொழித்து தாய் நாட்டின் வெற்றியினை உறுதி செய்த 2009 ஆம் ஆண்டினை வரலாற்றில் பதித்துவிட்டு நாம் 2010 ஆம் ஆண்டிலே காலடி எடுத்து வைத்துள்ளோம்.

பெற்றுக் கொண்ட வெற்றியினை அனுபவிக்கும் அதே நேரம் சௌபாக்கியம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை நாட்டினுள் தோற்றுவிப்பதே எதிர்காலத்தில் எமக்குள்ள பொறுப்பாகும்.

செய்ய முடியாது என நினைத்த அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு ஒரே நாட்டு மக்களாக அபிமானத்துடன் வாழ்வதற்குரிய சூழ்நிலையினுள், சிறந்தொரு நாட்டினை பெற்றுக்கொள்வது ஓர் இயலாத விடயமன்று.

அதற்காக குறுகிய நோக்கங்களை விட்டு விட்டு பொதுவானதொரு நோக்கத்திற்காக அனைவரும் அணிதிரண்டு நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலம் பிறந்துள்ளது.

அனாதிகாலம் தொட்டே இலங்கையர்கள் சவால்களை வெற்றிகொள்வதில் கெட்டிக்காரர்கள். எமது மூதாதையர்கள் எதிரிகளின் தொல்லைகளை பூண்டோடு அழித்து வரும்கால சந்ததியினருக்காக சிறந்ததொரு நாட்டை உருவாக்கினர்.

வருடம் தேய்ந்து புதியதொரு வருடம் பிறக்கும் இச்சந்தர்ப்பத்திலே அனைத்து இலங்கையர்களினதும் கடமையாக அமைவது யாதெனில், செழிப்பான இலங்கையினுள் நற்குணமிக்க, ஒழுக்கமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான பாதையை திறக்கும் அபிவிருத்திப் பணிக்கு நேரடிப் பங்களிப்புச் செய்வதாகும்.

2010 ஆம் ஆண்டின் புதிய ஆரம்பத்துடன் சிறந்ததொரு எதிர்காலத்தை நோக்கி ஒற்றுமையுடன் பயணிப்போம்.

**ரத்னசிறி விக்கிரமநாயக்க**
பிரதம அமைச்சர்

2009 டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி